RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s193

OPEN ACCESS

# திருமந்திரம் உணர்த்தும் ஒழுக்கநெறி

அ. லீமா [அ, *], மீ. அஸ்வினி கிருத்திகா [அ]

[அ] தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருநெல்வேலி- 627007, தமிழ்நாடு, இந்தியா

# Morality that Thirumanthiram Conveys

A. Leema [a, *], M. Aswini Kiruthika [a]

[a] Department of Tamil, Sarah Tucker College (Autonomus), (Affiliated to Manonmaniam Sundaranar University), Tirunelveli-627007, Tamil Nadu, India

* Corresponding Author: leemababu83@gmail.com

Received: 12-07-2022
Revised: 26-09-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Thirumanthiram is considered to be one of the twelve Thirumarais. This Thirumanthiram occupies the place of the tenth Thirumarai. Such Thirumanthiram contains a number of principles that can be used for human life. That is to say, discipline is to behave properly. Morality is a code followed by an individual in the interest of the common good and unity of oneself or the group to which he belongs. The Thirumanthiram contains songs to express this discipline. Among the genres of literature, Devotional literature expresses the concept of spirituality. Saiva and Vaishnava literature are revered as two eyes. The books written by Saiva Nayans are called Thirumarai and the books written by Vaishnava Alwars are called Naalaayira Divyaprabandham. Centuries ago, Thirumoolar beautifully explained in Thirumanthiram the messages of harmony required by the society that there is only one clan and only one God.

**Keywords:** Thirumantram, Trimoolar, Tenth Thiruma, Morality, Code of life, Love

## முன்னுரை

இலக்கிய வகைகளுள் ஆன்மீகம் சார்ந்த கருத்தினை எடுத்துரைப்பது பக்தி இலக்கியங்களாகும். இதில் சைவ, வைணவ இலக்கியங்கள் இருகண்களாகப் போற்றப்படுகின்றன. நாயன்மார்கள் எழுதிய நூல்கள் திருமுறைகளாகவும், வைணவ ஆழ்வார்கள் எழுதிய நூல்கள் நாலாயிர திவ்யபிரபந்தமாகவும் அழைக்கப்படுகின்றன. ஒன்றே குலமும், ஒருவனே தேவன்" என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமுதாயத்திற்கு வேண்டிய நல்லிணக்க செய்திகள் திருமந்திரத்தில் அழகாக விளக்கியவர் திருமூலர். இக்கட்டுரையின் வாயிலாக, 'திருமந்திரம் உணர்த்தும் ஒழுக்கநெறி' குறித்து ஆராய்வதாக அமைகின்றது.

## ஆய்வு முறை

திருமந்திரத்தில் இடம்பெறக்கூடிய ஒழுக்கம் சார்ந்த கருத்தினை ஆய்வு செய்து தீர்மானிக்கும் நோக்கத்தில் கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆய்விற்கான முதன்மை நூல் திருமந்திரமாகும். திருமந்திரம் என்ற நூல் முழுவதுமாக வாசிக்கப்பட்டு இவ்வாய்விற்காகத் தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் திருக்குறள், புறநானூறு, புதிய ஆத்திசூடி, முதுமொழிக்காஞ்சி ஆகிய நூல்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மேற்கோளாகக் கையாளப்பட்டுள்ளன.

இக்கட்டுரையின் தகவல்கள் அனைத்தும் மனித வாழ்வில் பின்பற்றக்கூடிய ஒழுக்க நெறி பற்றி விளக்கும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

## அறம் விளக்கம்

அறம் என்ற சொல் 'அறு' என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்ததே ஆகும். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் சுட்டப்படுகின்றன. இதன் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்கு, மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் ஆகும்.

## ஒழுக்கம் – விளக்கம்

ஒழுக்கம் என்பதற்குப் பல அர்த்தங்கள் சொல்லப்படுகின்றது. வரைமுறை, நெறி, நல்லன செய்தல், வேதம் ஆகியவற்றைப் புத்தகங்களில் சொல்லியபடி நடத்தல் என்று பலவிதமான அர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. முதுமொழிக் காஞ்சி என்ற நூலில் ஒழுக்கம் குறித்து,

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்

ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"

என்ற அடிகளின் வழி அறிய முடிகின்றது (Selvagesavaraya Mudaliar, 1919).

## திருமூலரும் திருமந்திரமும்

வடநாட்டை சேர்ந்த சிவயோகி ஒருவர் பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று இறைவனை வணங்கினார். மேலும் திருவாவடுதுறைக்கு அருகில் உள்ள சாத்தனூருக்கு வந்தார். அங்குள்ள காட்டில் ஆடுமாடு மேய்க்கும் மூலன் என்பவன் இறந்து கிடந்தான். அவன் மேய்த்துக் கொண்டிருந்த ஆடு, மாடுகள் அவனைச் சுற்றி வருத்தத்துடன் கண்ணீருடன் மேயாமல் அழுது கொண்டு நின்றன. இதனைக் கண்ட சிவயோகி மிகுந்த வருத்தமடைந்தார். அவற்றின் வருத்தத்தினைப் போக்க எண்ணினார். கூடுவிட்டுக் கூடுபாயும் அட்டமாசித்திகளும் அறிந்த சிவயோகி. ஆதலால் தன் உடலை மறைத்து வைத்து விட்டு அவர் மூலன் உடலில் புகுந்தார். அம்மூலன் ஆடு, மாடுகளைக் கொண்டு வந்து ஊரில் சேர்த்தார். பின்னர் தனது உடலை விட்டுச் சென்ற இடத்திற்கு வந்தார். அப்போது அவரது உடல் காணாமல் போயிற்று. ஆகவே மூலனது உடலிலேயே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மூலனது உடலிலேயே இருந்து திருவாவடுதுறையில் உள்ள அரச மரத்தடியில் யோகத்தில் இருந்தார். மூலன் உடலில் இருந்தமையால் அவரைத் திருமூலர் என அழைத்தனர். அவ்வாறு யோகத்தில் இருந்து ஆண்டுக்கு ஒரு முறை கண்விழித்தெழுந்து ஒரு பாடல்வீதம் 3000 பாடல்கள் பாடினார். இப்பாடல்களின் தொகுப்பே திருமந்திரம் எனப்படுகிறது.

## அன்பு அவசியம்

அன்புதான் கடவுள் என்பதை ஆணித்தரமாகச் சொல்கிறார் திருமூலர். தினமும் கோயிலுக்குப் போவது, கடவுளை வழிபடுவது இவற்றைத் தவறாமல் செய்து விட்டு, சக மனிதர்கள் மீது அன்பு இல்லாமல் இருப்பது அறிவீனம்.

"அன்பிற் சிறந்த தவமில்லை" என்கிறான் பாரதி. காட்டிற்குப் போய் வருடக்கணக்கில் கண் மூடி அமர்ந்துதான் தவம் செய்ய வேண்டும் என்பது இல்லை. அடுத்தவர்களிடம் அன்பு செய்வதே மேலான தவம். அன்பு வேறு, சிவம் வேறு, இரண்டும் ஒன்றல்ல வேறு வேறு என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே சிவம் என்பதை யாரும் அறியாதிருக்கிறார்கள். அன்புதான் சிவம்

என்பதை எல்லோரும் அறிந்து விட்டால், பிறகு அவர்களே அன்புருவான சிவமாய் வாழ்ந்திருப்பார்கள். இதனை,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்ற பாடல் அடிகள் அன்பு தான் கடவுள் என்பதை ஆணித்தரமாகத் திருமந்திரம் உணர்த்துகின்றது (Selvagesavaraya Mudaliar, 1919).

மற்றொரு கருத்தானது, கோயிலுக்குச் செல்வது, பூஜை செய்வது, மந்திரம் சொல்வது, படையல் வைப்பது போன்றவையெல்லாம் முக்கியம்தான். ஆனால் அவற்றையெல்லாம்விட, உண்மையான அன்பு வேண்டும். அதனால் உங்கள் உள்மனம் குழைந்து அவனை வணங்கிச் சரணடைய வேண்டும். அப்போதுதான் ஒப்பற்ற மணியாகிய அவனது திருவருள் உங்களுக்குக் கிடைக்கும் என்று திருமூலர் வலியுறுத்தியுள்ளார்.

இதனை,

"அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி

என்போல் மணியினை எய்தவொண்ணாதே" (Selvagesavaraya Mudaliar, 1919)

என்ற வரிகள் புலப்படுத்துகின்றது.

இக்கருத்தை வலியுறுத்தியே திருவள்ளுவரும்,

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு"

என்ற குறளடியின் வாயிலாக, அன்பின் வழி ஒழுகினால் வாழ்வின் உயர்நிலையை அடையலாம். ஆகவே ஒவ்வொருவரும் அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று விளக்குகின்றது (Goumareeswari, 2002).

## வழிபாட்டு முறை

இறைவனை ஒரு பச்சிலை கொண்டு பூஜை செய்யுங்கள் பசுவிற்கு ஒரு வாயளவு புல், உணவு கொடுங்கள் சாப்பிடும் போது, ஒரே ஒரு கைப்பிடி எடுத்து வறியவர்க்குச் சாப்பிடக் கொடுங்கள் பிறரிடம் இனிமையான வார்த்தைகளையே பேசுங்கள் இது எல்லோரும் செய்யக்கூடிய மிக எளிய வழிபாடு என்பதனை,

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை

யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை

யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி

யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

என்ற பாடல் அடிகள் வாயிலாக அறிய முடிகின்றது (Selvagesavaraya Mudaliar, 1919).

கொடைத்திறம் பற்றி புறநானூற்றில்,

"எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றுஎன

மறுமை நோக்கின்றோ அன்றே

பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே!"

என்பதில் பரணர், பேகனைப் பாராட்டுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். என்ன நேர்ந்தாலும் பிறருக்கு வழங்க வேண்டும் என்ற கருத்தினை வெளிப்படுத்துகிறது (Manikkavasakar, 1998).

## ஐம்புலன் உணர்வு

ஐம்பொறிகள் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தாகும். ஐம்புலனின் உணர்வானது, கண் – ஒளி (பார்த்தல்), காது – ஒலி (கேட்டல்), மூக்கு – சுவாசம் (மணம், நாற்றம்), வாய் – சுவை, மெய் – உடல் (தொடு உணர்வு) ஐம்பொறிகளையும் அவற்றால் உணரக்கூடிய ஐம்புலன்களையும் அடக்கி ஆள்பவன் இந்த உலகத்தை வெல்வான் என்பது சான்றோர் வாக்கு.

ஐவராகிய ஐம்பொறிகளுக்கும் தலைவன் ஆருயிர் ஆகும். அதாவது ஐம்பொறிகளையும் உறுப்பாகக் கொண்டு உடல் திகழ்கின்றது. அதனால் அவ்வுடலை ஐவர் (ஐம்புலன்) வாழும் ஊரென்றனர். அவ்வூர்க்குத் தலைமகன் மனம் என்று விளக்குகின்றது. இதனை,

"ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்"

என்ற வரி உணர்த்துகின்றது.

"ஐவரு மைந்தரு மாளக் கருதுவர்"

என்ற அடியின் வாயிலாக, ஐந்து புலன்களும் ஆட்சி புரியக் கருதும் ஐந்து இடங்கள் ஐந்துபொறிகள் என்று விளக்குகின்றது (Selvagesavaraya Mudaliar, 1919).

மற்றொரு பாடலில், ஓர் ஊரில் ஒரு அந்தணன் இருந்தான். அவனிடம் ஐந்து கறவைப் பசுக்கள் இருந்தன. நல்ல பசுக்கள். அதிகமாகப் பால் தரக்கூடிய பசுக்கள். ஆனால் அப் பசுக்களை மேய்ப்பதற்கு எந்த விதமான ஏற்பாடும் அவன் செய்யவில்லை. அப்பசுக்கள் தம் மனம் போலத் தினமும் எங்கெங்கோ மேய்ந்து திரிந்து பாலைச் சொரிந்து விட்டு வீடு திரும்பி வந்தன. அப்பசுக்களின் பயன் அதன் உரிமையாளனுக்குக் கிடைக்காமல் போயிற்று. அப்பசுக்களைச் சரியான முறையில் தினமும் மேய்ப்பதற்கு அவன் ஏற்பாடு செய்திருந்தால் நல்ல பயன் அடைந்திருப்பான். அந்தப் பசுக்கள் ஐந்தும் பாலாய்ச் சொரிந்திருக்கும். அது போல ஐம்புலன்களான கண், மூக்கு, வாய், செவி, மெய் உணர்வு ஆகிய ஐம்புலன்களையும் அடக்கி ஆள வேண்டும் என்று திருமந்திரம் மெய்ப்பித்து காட்டுகின்றது. இதனை,

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு

மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன

மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்

பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே"

என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன (Selvagesavaraya Mudaliar, 1919).

இக்கருத்தை வலியுறுத்தியே, புதிய ஆத்திச்சூடியில்,

"ஐம்பொறி ஆட்சி கொள்"

என்பது ஐம்பொறி உணர்வுகளை நமது பகுத்தறிவின் மூலம் நமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்ள வேண்டும். அதை ஒழுங்கு முறைப்படுத்தி செயல்படுத்த வேண்டும். நாம் ஐம்பொறிகளை ஆள வேண்டுமேயல்லாது ஐம்பொறிகள் நம்மை ஆளக்கூடாது. மனிதன் தனது ஐம்பொறிகள் மீது ஆட்சி கொண்டால் உலகில் நடைபெறும் பெரும்பாலான குற்றங்கள் மறைந்துவிடும். ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவையெல்லாம் ஐம்பொறிகள் சம்பந்தப்பட்டவைகளே"என்று விளக்கம் கூறியுள்ளார் (Srinivasan, 2002).

## வாழ்க்கை நெறி

வாழ்க்கைக்கு என்று வகுக்கப்பட்ட நல்வழியும் உண்டு. கவர்ச்சி உண்டாக்கிக் கெடுக்கும் இடர்களும் உண்டு. கடவுளே நெறியையும் படைத்தான் அடுத்து நெறிஞ்சில் முள்ளையும் படைத்தான். நெறிதவறி நடந்தால், காலில் முள் குத்தும். நெறி தவறாமல் நடக்க வல்லவர்களுக்கு அந்த முள் ஒன்றும் இடர் செய்யாது.

"நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்

நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்

நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு

நெறியின் நெருஞ்சில் முட்பாயகி லாவே"

என்ற அடிகள் மெய்ப்பிக்கின்றது (Selvagesavaraya Mudaliar, 1919).

## ஐந்து பாவங்கள்

பிற உயிரைக் கொல்லுதல், பிறர் பொருளைக் களவு செய்தல், புத்தியை மயக்கும் கள்ளை குடித்தல், பெண்களின் மீது காமவயப்படுதல், பொய் பேசுதல் ஆகிய இந்த ஐந்தும் உயிர்கள் செய்யக்கூடிய பாவங்களிலேயே மிகவும் பெரிய பாவங்கள் ஆகும். இவ்வகையான பாவங்களைச் செய்யாமல் இறைவனது திருவடிகளைத் தனது சிந்தனையில் வைத்து, இறைவனைப் பற்றிய எண்ணங்களிலேயே திளைத்து இருப்பவர்களுக்கு பேரறிவு ஞானத்தினால் விளங்கும் பேரின்பம் எப்போதும் கிடைக்கும்.

இதனை,

"கொலையே களவுகட் காமம்பொய் கூறல்

மலைவான பாதக மாம்அவை நீக்கித்

தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்கு

இலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே"

என்று அடிகள் வாயிலாக அறிய முடிகிறது (Selvagesavaraya Mudaliar, 1919).

## மூன்று குற்றங்கள்

ஆருயிர்க்கு மீண்டும் மீண்டும் பிறப்பினைத் தரக்கூடிய குற்றங்கள் மூன்று. அவை, 'காமம் வெகுளி மயக்கம்' என்பனவாகும். அக்குற்றங்கள் நீங்கப்பெற்றவரே துன்பத்தை நீக்கினவர் ஆகின்றனர். நீங்கப் பெறாதவர் அக்குற்றங்களில் கிடந்து கெடும் முறைமையை உடையவர் என்பதனை,

"மூன்றுள குற்ற முழுதும் நலிவன

மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன

மூன்றினை நீங்கினர் நீக்கினர் -நீங்காதார்

மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறன்றே"

என்ற அடிகள் வாயிலாக மூன்று குற்றங்கள் பற்றி மெய்ப்பிக்கிறது (Selvagesavaraya Mudaliar, 1919).

மேலும்,

"காமம் வெகுளி மயக்க மிவைகடிந்து"

காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களையும் முழுவதுமாக நீக்குதல்வேண்டும் என்று விளக்குகிறது (Selvagesavaraya Mudaliar, 1919).

காமம் என்பதற்கு பெருவிருப்பம், ஆசை, விழைவு என்றும், வெகுளி என்பதற்கு வெறுப்பு, சினம் என்றும், மயக்கம் என்பதற்கு அறியாமை, அறிவு என்றும் பொருள்படுகின்றது. இக்கருத்தை வலியுறுத்தியே, திருவள்ளுவரும்

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்

நாமங் கெடக்கேடு நோய்"

என்று குறளடிகளால் விருப்பு, வெறுப்பு, மயக்கம் என்னும் இம்மூன்றன் பெயருங்கூட உள்ளத்திற்குள் இல்லாமல் போனால், அவற்றால் வரும் துன்பங்களும் இல்லாமல் போகும் என்று உணர்த்துகின்றது (Goumareeswari, 2002).

## முடிவுரை

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட தமிழ் சைவசமயப் படைப்பு ஆகும். இந்நூல் மெய்யியல் நூல் வகையைச் சேர்ந்தது. எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலில் தன்னலம், தன்னுணர்வு என்பவற்றைக் கடந்து மனித சமுதாயம் இன்புற்று வாழப் பல அரிய நற்கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. மனிதனின் வாழ்வியலுக்கு வேண்டிய நல்ல கருத்துக்கள் பல திருமந்திரத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில் அன்பு அவசியம், வழிப்பாட்டு முறை ஐம்புலன் உணர்வு, ஐந்து பாவங்கள் என்ற அடிப்படையில் கருத்துக்கள் அமைகின்றது. மூன்று குற்றங்கள் இல்லாமல் இருத்தலைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. இந்த ஆய்வினால், ஒழுக்கநெறி முறையினை மனிதன் பின்பற்றினால் வாழ்க்கையில் மேம்பட்டுத் திகழலாம் என்பதனை இக்கட்டுரை விளக்குவதாகப் பிரதிபலிக்கின்றது.

## References


Goumareeswari, S, (2002) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Manikkavasakar, Jha. (1998) Purananuru, Saradha Pathippagam, Chennai, India.

Selvagesavaraya Mudaliar, T. (1919) Muthumozhikanchi, Pachaiyappan College, Chennai, India

Srinivasan. A, (2002) Bharati's New Atchichudi, Saradha Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License